வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016
# Term Examination, November - 2016

FWC

| தரம் :- 13 (2017) | இந்து நாகரிகம் – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

➢ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) இருக்கு வேதத்தில் ஒழுக்கக் கடவுளாக போற்றப்படுபவர்
(1) இந்திரன் (2) பிரஜாபதி (3) உருத்திரன் (4) சூரியன் (5) வருணன்

02) ஆன்மாவின் இறப்புக்குப் பிற்பட்ட நிலை பற்றிக் குறிப்பிடும் வேத சூக்தம்
(1) யம சூக்தம் (2) நாஸதீய சூக்தம் (3) முனி சூக்தம்
(4) புருஷ சூக்தம் (5) வருண சூக்தம்

03) ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தைப் பண்படுத்தும் கிரியை பற்றி குறிப்பிடும் ஆகமப்பிரிவு
(1) உற்சவம் (2) பிரதிட்டை (3) பிராயச்சித்தம்
(4) கர்ஷணம் (5) பதிபடலம்

04) குஷாணர் கால நாணயங்களில் பொறிக்கப்பட்ட வடிவங்கள் கொண்ட தொகுதி
(1) எருது, திருமால், லட்சுமி, விசிகன்
(2) நந்தி, மயில், வேல், கருடன்
(3) கஜலட்சுமி, கருடன், திருமால், விசிகன்
(4) முருகன், வேல், எருது, லட்சுமி
(5) வாசுதேவர், எருது, லட்சுமி, விஷ்ணு

05) இந்து இஸ்லாம் ஒற்றுமையை வலியுறுத்திய வட இந்திய பக்திநெறியாளர்
(1) கபீர்தாஸர் (2) நாமதேவர் (3) மீராபாய் (4) துளசிதாஸர் (5) சைதன்யர்

06) சிவ பரத்துவத்தை விளக்கும் புராணக் கதை
(1) மகிடாசுரனை அழித்த கதை (2) மார்க்கண்டேயர் கதை
(3) பாகவத புராண அவதாரக் கதை (4) அடிமுடிதேடிய கதை
(5) விநாயகர் புராணக் கதை

07) அரசனின் ஆட்சி, நீதி, அதிகாரம் பற்றிக் கூறும் தர்மசாத்திரத்தின் பகுதி
(1) ஆசாரம் (2) கல்ப சூத்திரம் (3) வியவகாரம்
(4) பிராயசித்தம் (5) புருஷ சூக்தம்

08) தென் கிழக்காசிய அரச சபைகளில் புரோகிதர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
(1) ராஜன் (2) விஸ்பதி (3) பட்டார் குரு (4) விஸ்பதி (5) இராஜ குரு

09) சிற்பக் கலைக் களஞ்சியம் எனப் போற்றப்பட்ட கோயில்
(1) சிதம்பரம் (2) திரௌபதை ரதம் (3) சகாதேவ ரதம்
(4) தர்மராஜன் ரதம் (5) அருச்சுனன் ரதம்

10) இறை இன்பத்திலும் வேறுபாடு உண்டு எனக் கூறியவர்
(1) சங்கரர் (2) இராமானுஜர் (3) மத்துவர் (4) ஸ்ரீகண்டர் (5) இராமானந்தர்

11) சிவாலயங்களில் கருவறையின் மேற்குத் திசைச் சுவரின் கோஷ்ட பஞ்சரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் மூர்த்தம்
(1) தட்சணா மூர்த்தி (2) திரிபுராந்தகர் (3) இலிங்கோற்பவர்
(4) நடராஜ மூர்த்தம் (5) லிங்கம்

12) சோழர் காலத்தில் இசைக் கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட பட்டம்
(1) தேவாரநாயகம் (2) வாச்சியமாராயன் (3) வித்தியாதரன்
(4) பரிராதினி (5) வீணாகரன்

13) யோக சுவாமிகளின் சீடரான சிவசுப்பிரமுனிய சுவாமிகளால் சிவன் கோயில் மற்றும் ஆச்சிரமம் தாபிக்கப்பட்ட இடம்
(1) நியூஸ்லாந்து (2) ஹவாய் தீவு (3) அமெரிக்கா (4) பிரான்ஸ் (5) ஜேர்மனி

14) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், கொழும்பு பல்கலைக் கழகத்திலும் முதல் தமிழ் பேராசிரியராக பணிபுரிந்தவர்
(1) ஆறுமுகநாவலர் (2) விவேகானந்தர் (3) சுவாமி விபுலானந்தர்
(4) கோபாலகிருஷ்ண ஐயர் (5) இராமகிருஷ்ணர்

15) வைணம் கூறும் பஞ்ச ஞானங்கள்
(1) பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை
(2) அவதாரம், ஆவேசம், அமிசம், தாஸ்யநாமம், திருமண்
(3) தத்துவம், பேறு, தகுதி, உபாயம், பலன்
(4) அர்ச்சை, பேறு, அமிசம், ஆவேசம், திருமண்
(5) பேறு, தகுதி, அமிசம், உபாயம், பலன்

16) மீளா நகரம் பற்றிய கருத்தை முன்வைத்த வேதாந்தி
(1) மத்துவர் (2) கௌடபாதர் (3) இராமானுஜர் (4) சங்கரர் (5) மெய்கண்டார்

17) உயர் பிரமம் ஒன்றே அதற்கு அப்பால் ஒன்றும் இல்லை எனக் குறிப்பிடும் உபநிடதம்
(1) கேன உபநிடதம் (2) பிரச்சின உபநிடதம் (3) கடோ உபநிடதம்
(4) தைத்திரீய உபநிடதம் (5) பிருகதாரணிய உபநிடதம்

18) "தென்திசைமேரு" என அழைக்கப்பட்ட சோழர்காலக் கோவில்
(1) உத்தம சோழேஸ்வரம் (2) வானவன் மாதேவீஸ்வரம்
(3) கங்கைகொண்ட சோழேஸ்வரம் (4) தஞ்சைப் பெருங்கோவில்
(5) இரவிகுல மாணிக்கேஸ்வரம்

19) "வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல் "எனப் போற்றும் நூல்
(1) பெரியபுராணம் (2) கந்தபுராணம் (3) ஆகமம்
(4) வேதம் (5) திருமந்திரம்

20) மகேந்திரவர்மனின் சிவபக்தியைக் காட்டும் சிவதோத்திரம் இடம்பெறும் கல்வெட்டு
(1) குடுமியாமலை (2) சீயமங்கலம் (3) மண்டகப்பட்டு
(4) மகேந்திரவாடி (5) திருச்சிராப்பள்ளி

21) இராமகிருஷ்ண மிஷனைத் தோற்றுவித்தவர்
(1) விபுலானந்தர் (2) விவேகானந்தர் (3) கபிலர்
(4) இராமகிருஷ்ணர் (5) சங்கரர்

22) திருவிளையாடல் புராணத்தின் ஆசிரியர்
(1) கச்சியப்பர் (2) சேக்கிழார் (3) பரஞ்சோதிமுனிவர்
(4) சிவஞானமுனிவர் (5) வரதபண்டிதர்

23) இராமாயணம், மகாபாரதம் இறுதி வடிவம் பெற்ற காலம்
(1) வேதகாலம் (2) சங்ககாலம் (3) நாயக்கர் காலம்
(4) குப்தர் காலம் (5) புராணகாலம்

24) சிவாகமப் பொருளை முதலில் தமிழில் தந்தவர்
(1) திருவள்ளுவர் (2) கம்பர் (3) சேக்கிழார்
(4) ஆறுமுகநாவலர் (5) திருமூலர்

25) ராஜராம் மோகன்ராய் எத்தனையாம் ஆண்டு ஆத்மீக சபையை அமைத்தார்.
(1) 1815 (2) 1888 (3) 1820 (4) 1828 (5) 1829

26) அம்பிகை வழிபாட்டிற்குரிய நூல் அல்லாதது
(1) மானசாரம் (2) சௌந்தர்யலஹரி (3) அபிராமி அந்தாதி
(4) ஸ்ரீ லலிதாசகஸ்ர நாமம் (5) சகலகலாவல்லிமாலை

27) சாஸ்திர நூலாகவும், தோத்திர நூலாகவும் போற்றப்படும் திருமுறை
(1) தேவாரம் (2) திருவாசகம் (3) திருப்பல்லாண்டு
(4) திருமந்திரம் (5) பெரியபுராணம்

28) இந்தியாவின் புதுயுகத் தந்தை, பகுத்தறிவுவாதத்தின் தந்தை எனப் போற்றப்பட்டவர்
(1) ராஜராம் மோகன்ராய் (2) தாயானந்தசரஸ்வதி (3) இராமகிருஷ்ணர்
(4) சுவாமி விவேகானந்தர் (5) விபுலானந்தர்

29) ஜனநாதமங்கலம் என அழைக்கப்பட்டது
(1) யாழ்ப்பாணம் (2) கண்டி (3) பொலநறுவை
(4) அனுராதபுரம் (5) பிராமணர் குடியிருப்பு

30) வானவன் மாதேவீஸ்வரத்தின் மறுபெயர்
(1) 5ம் சிவாலயம் (2) 2ம் சிவாலயம் (3) 3ம் சிவாலயம்
(4) 6ம் சிவாலயம் (5) 4ம் சிவாலயம்

31) இந்துமதத்திற்கு ஆதரவு புரிந்த பௌத்த மன்னன்
(1) குளக்கோட்டன் (2) இராஜேந்திரன் (3) விஜயபாகு
(4) பராக்கிரமபாகு (5) நந்திவர்மன்

32) அங்கோர்வாட் சிவாலயம் அமைந்துள்ள நாடு
(1) பர்மா (2) யாவா (3) தாய்லாந்து (4) கம்போடியா (5) சுமாத்திரா

33) தானே நெருப்பை உண்டாக்கி தாயின் தகனக் கிரியை செய்தவர்
(1) மத்துவர் (2) இராமானுஜர் (3) சங்கரர் (4) ஸ்ரீகண்டர் (5) கபிலர்

34) அத்வைதக் கோட்பாட்டின் திறவுகோலாக அமைவது
(1) வேதம் (2) புராணம் (3) சாஸ்திரம்
(4) மாண்டுக்கியகாரிகை (5) திருமந்திரம்

35) சுவர்ணபூமி எனப் போற்றப்படும் தேசம்
(1) தென்கிழக்காசிய நாடுகள் (2) ஐரோப்பிய நாடுகள்
(3) மேலத்தேசம் (4) கீழத்தேசம்
(5) மேற்குலக நாடுகள்

36) சோமாஸ்கந்த மூர்த்தியில் இடம்பெறும் மூர்த்தங்களின் பெயர்கள் அடங்கும் தொகுதி
(1) சிவன், உமை, விஷ்ணு (2) சிவன், உமை, விநாயகர் (3) சிவன், ஸ்கந்தன், உமை
(4) சிவன், விநாயகர், உமை (5) சிவன், விஷ்ணு, உமை

37) உபாகமங்களின் எண்ணிக்கை
(1) 10 (2) 18 (3) 28 (4) 108 (5) 207

38) பிரமத்தை உணர்தலே முத்தி எனக் குறிப்பிட்டவர்
(1) ஸ்ரீகண்டர் (2) சங்கரர் (3) மத்துவர் (4) இராமானுஜர் (5) நாரதர்

39) "எங்கே தருமம் உள்ளதோ அங்கே வெற்றி உள்ளது" என்ற அறக் கருத்தினைப் போற்றும் நூல்
(1) மானசாரம் (2) திருக்குறள் (3) திருமந்திரம் (4) பகவத்கீதை (5) ஆத்திசூடி

40) "ஸ்தபதி" எனப்படுபவன்
(1) கோயிலுக்கு நிதி வழங்குபவன்
(2) பஞ்சபுராணம் ஓதுபவன்
(3) கிரியைகளை மேற்கொள்பவன்
(4) கோயிலை பரிபாலனம் செய்பவன்
(5) கோயில் கட்டிடத்தை நிர்மாணிப்பதில் தேர்ச்சி பெற்றவன்

➢ கீழ்வரும் பகுதிகளிலே தரப்பட்டுள்ள சொற்களில் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்ட ஒரு விடயத்தோடு தொடர்புடையவை அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சோடியைத் தெரிவு செய்க.

| A<br>மாமல்லன் | B<br>காளிதாஸர் | C<br>திருமூலர் | D<br>விட்டலாசுவாமிகோயில் | E<br>நல்வழி |
|---|---|---|---|---|
| F<br>தமிழாகமம் | G<br>ஆத்திசூடி | H<br>1ம் நரசிம்மபல்லவன் | I<br>குமாரசம்பவம் | J<br>கிருஷ்ண தேவராயர் |

41) விஜயநகர கலைமரபுடன் தொடர்புடைய சோடி

(1) J, A (2) D, J (3) H, D (4) J, H (5) C, A

42) வாதாபிச் சாளுக்கியருடன் போராடி தமிழகத்தை மீட்ட பெருமையுடைய மன்னன், ரதக் கோயில்களை அமைத்தவனும் இவனே

(1) J, D (2) B, H (3) J, H (4) A, H (5) D, A

43) குப்தர் கால இலக்கியமும், ஆக்கியவரும்

(1) B, I (2) J, B (3) C, G (4) D, H (5) A, I

44) 10ம் திருமுறையாகப் போற்றப்படுவது

(1) F, G (2) C, G (3) C, F (4) A, I (5) E, C

45) ஆறுமுகநாவலர் உரைசெய்த நூல்கள்

(1) F, G (2) I, F (3) E, I (4) G, I (5) E, G

➢ 46 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்க.

| A<br>மகரி | B<br>12 பாடல்கள் | C<br>ஐந்தாம் வேதம் | D<br>18 பருவங்கள் | E<br>இதிகாசம் |
|---|---|---|---|---|
| F<br>மானசாரம் | G<br>ஆரிய கூத்து | H<br>விவேகானந்தன் | I<br>ஒழுக்கம் | J<br>மகாபாரதம் |
| K<br>சிவதொண்டன் | L<br>சலவிக்கிரகம் | M<br>தேவரடியார் | N<br>சைவசித்தாந்தபானு | O<br>ரிதம் |
| P<br>வருணன் | Q<br>சைவக் காவலன் | R<br>நடராஜா் | S<br>நடனமந்திர் | T<br>ஐம்பொன் |

46) நடனக் கலையுடன் தொடர்புடைய தொகுதி

(1) A, G, M, S (2) E, M, S, R (3) C, F, K, G (4) R, S, Q, F (5) M, G, I, O

47) விக்கிரகக் கலையுடன் தொடர்புடைய தொகுதி

(1) T, P, F, H (2) J, E, O, K (3) C, G, L, F (4) F, L, R, T (5) L, R, S, T

48) ஈழத்தில் இந்துப் பண்பாட்டை வளர்த்த பத்திரிகைகள்

(1) J, P, Q, N (2) C, N, F, Q (3) N, J, K, O (4) F, G, H, C (5) K, Q, H, N

49) வேதகால தேவருடன் தொடர்புடைய தொகுதி

(1) B, Q, R, I (2) P, B, O, I (3) P, B, F, O (4) O, C, E, R (5) I, P, Q, S

50) பகவத்கீதை தோன்றுவதற்கு காரணமாக அமைந்த தொகுதி

(1) J, D, O, F (2) J, D, F, A (3) C, D, E, J (4) C, Q, R, S (5) E, C, K, H

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

FWC

# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016

# Term Examination, November - 2016

| தரம் :- 13 (2017) | இந்து நாகரிகம் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

➢ பகுதி - I இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும் பகுதி - II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி - I

01) சிவாகமங்கள் இந்துநாகரிகத்தை வளம்படுத்தியவாற்றை மேல்வரும் விடயங்கள் அடிப்படையில் ஆராய்க.

(அ) ஆகமம் என்பதன் பொருள் விளக்கம்
(ஆ) ஆலயக் கிரியைகளும் அனுட்டானங்களும்
(இ) சைவசித்தாந்த சிந்தனைகள்
(ஈ) ஆகமங்களின் முக்கியத்துவம்

($2 + 6 + 6 + 6 = 20$ புள்ளிகள்)

02) இந்துசமய நம்பிக்கைகள் இந்தியாவைப் போலவே இலங்கையிலும் தனித்துவமும் வரலாற்றுப் பழமையும் கொண்டு விளங்கும் ஆற்றலை மேல்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராய்க.

(அ) இலங்கையில் இந்துமத வரலாற்றைப் புலப்படுத்தும் சான்றாதாரங்கள்
(ஆ) பௌத்த மன்னர்கள் இந்து சமயத்திற்காற்றிய பணிகள்
(இ) இதிகாசங்கள் ஊடாக ஈழத்து இந்துப்பண்பாட்டு வளர்ச்சி

($4 + 8 + 8 = 20$ புள்ளிகள்)

03) தென்கிழக்காசிய நாடுகளில் இந்துப் பண்பாடு செல்வாக்குப் பெற்றவாற்றை மேல்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராய்க.

(அ) இந்து இலக்கியங்களின் செல்வாக்கு
(ஆ) இந்து சமயச் சடங்குகள்
(இ) கலை மரபுகள் ($7 + 7 + 6 = 20$ புள்ளிகள்)

## பகுதி - II

04) சோழர் காலத்திலே கோயிற் கட்டடக்கலை வளர்ச்சி பெற்றவாற்றை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

(அ) கட்டடக்கலையின் பிரதான வளர்ச்சி நிலைகள்
(ஆ) கட்டட அமைப்பில் விமானத்தின் சிறப்பம்சங்கள்

($10 + 10 = 20$ புள்ளிகள்)

05) சங்கர வேதாந்தம் ஒரு தத்துவக் கோட்பாடாக உருவாகியதை மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க.

(அ) பிரமாண நூல்கள்
(ஆ) பிரமம்
(இ) உலகம் பற்றிய கொள்கை
(ஈ) ஆன்மீக விடுதலையும் விடுதலைக்கான வழிமுறைகளும்

($2 + 6 + 6 + 6 = 20$ புள்ளிகள்)

06) “இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் குப்தர் காலம் பொற்காலமாகும்” இக்கூற்றினை மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.

(அ) இந்துப் பண்பாட்டை அறிய உதவும் மூலாதாரங்கள்

(ஆ) இலக்கியங்கள்

(இ) அரசர்களும் சமயப் பண்பாடும்

($6 + 7 + 7 = 20$ புள்ளிகள்)

07) இந்துப் பண்பாட்டில் இசைக்கலை பெற்றுள்ள முக்கியத்துவத்தினை எடுத்துக் கூறுக.

(20 புள்ளிகள்)

08) மேல்வருவனவற்றில் எவையேனும் நான்கிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(அ) மகாபாரதம்

(ஆ) காணபத்தியம்

(இ) பிரமசமாசம்

(ஈ) திருக்கோணேஸ்வரம்

(உ) சைவபரிபாலனசபை

(ஊ) கபீர்தாஸர்

($5 + 5 + 5 + 5 = 20$ புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education